# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032
தொலைபேசி: 044-22201037
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ),

முறையீட்டு மனு எண்: 0080/2017/ந

ஆணை எண்: 160/2017

நாள்: 19/06/2017

திரு. A. முருகன்,
செயலாளர் யாதவ முன்னேற்ற சங்கம்,
உலகப்பசெட்டி கொல்லை தெரு,
கள்ளக்குறிச்சி,
விழுப்புரம் மாவட்டம் - 606 202 — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கள்ளக்குறிச்சி நகராட்சி. — எதிர் மனுதாரர்

ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. அ. முருகன் என்பவரது 07.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 10.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0080/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் முறையீட்டு மனுதாரர் கள்ளக்குறிச்சி நகரில் பழனிவேல் மருத்துவமனை அருகில் நகராட்சி அனுமதி பெறாமல் MCS திருமண மண்டபம் (மினி மஹால்) இயங்கி வருவதாகவும், இதனை அப்புறப்படுத்துமாறு 30.06.2016 அன்று அதன் உரிமையாளருக்கு நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டதெனவும், நகராட்சி அலுவலர்களுக்கு கையூட்டு வழங்கப்பட்டு வருவதால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டு வருவதாகவும் புகார்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பதிலறிக்கை தாக்கல் செய்யுமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0080/2017/ந நாள்:19.04.2017ன் மூலம் ஆணையிடப்பட்டது. மேலும், 07.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கங்களை தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு அழைப்பாணையும் (மு.ம.எண்.0080/17/ந நாள்:25.04.2017) அனுப்பப்பட்டது. இதனிடையே கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ந.க.எண்.அ1/1121/2017 நாள்:08.05.2017, இம்முறைமன்ற நடுவத்திற்கு 09.05.2017 அன்று வரப்பெற்றது.

மேற்படி அறிக்கையில் புகாரில் கூறப்பட்டுள்ள திருமண மண்டபம் கட்டியுள்ளதை அகற்ற கோரியும்/உரிய விண்ணப்பங்களுடன் விண்ணப்பித்து சட்டப்படி அனுமதி பெற்றுக் கொள்ளுமாறும் 30.6.2016ல் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், இடைப்பட்ட காலங்களில் உள்ளாட்சி சாதாரண தேர்தல், பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் மூலம் பயனாளிகளை கண்டறிவதற்கான கணக்கெடுப்பு பணி, சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கணக்கெடுப்பு பணி, சீமை கருவேல மரங்கள் அகற்றுதல், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை போன்ற பணிகள் மேற்கொண்டதால் கால தாமதம் ஏற்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 05.05.2017 அன்று சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளருக்கு இரண்டாம் அறிவிப்பு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

07.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் கூறியுள்ள புகார்களை வலியுறுத்தியதுடன் புகாரில் குறிப்பிட்டுள்ள விதி மீறிய கட்டிடத்தின் உரிமையாளர் தற்பொழுது பொது இடத்தையும் ஆக்கிரமித்து திருமண மண்டபமும், வீடும் கட்டியுள்ளாரெனத் தெரிவித்து தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

இம்முறை மன்ற நடுவம் இந்நேர்வில் கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் மட்டுமன்றி வரப்பெற்றுள்ள அறிக்கையும் அவர்களது பொறுப்பற்ற தன்மையை காட்டுவதாகவே கருத வேண்டியுள்ளது. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பிற பணிகளுக்காக நகராட்சிக்கு இழப்பு ஏற்படும் வகையிலான விதி மீறிய கட்டிடம் தொடர்பான நடவடிக்கைகளில் காலதாமதம் என்பது ஏற்கக் கூடியதல்ல. மேலும், விதி மீறிய சட்டத்துக்கு புறம்பான கட்டிடத்திற்கு ஓராண்டுக்கு பின்னர் வெறும் ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டிருப்பதை கண்துடைப்பாகவே கருத வேண்டியுள்ளது. மேலும், நகராட்சி அலுவலர்கள் கையூட்டு பெற்று

வருவதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற புகாருக்கு எவ்வித விளக்கங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

அத்துடன் இம்முறைமன்ற நடுவத்திலிருந்து அறிக்கை கோரி அறிவிப்பாணை அனுப்பப்பட்ட பின்னர் கூட மேற்படி விதி மீறிய கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு, எத்தனை ஆண்டுகளாக வணிக பயன்பாடாக (திருமண மண்டபம்) இயங்கி வருகிறது, நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள வரி இழப்பு, கண்காணிக்கத் தவறிய அலுவலர்கள் விவரம் நகராட்சி அனுமதியின்றி மின் இணைப்பு பெற்ற விவரம் போன்ற அடிப்படை விபரங்களை கூட சேகரித்து சமர்ப்பிக்காதது, இந்நகராட்சி அலுவலர்களது மெத்தனப் போக்கையும் விதி மீறலுக்கு துணைபோகும் நிலை உள்ளது என்பதனை சுட்டிக்காட்டுகிறது.

எனவே, புகாரில் கூறப்பட்டுள்ள கட்டிடம் தொடர்பாக சட்டப்படியான நடவடிக்கைகளை உறுதி செய்வதுடன், நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டினை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலித்து ஈடுசெய்யவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும், சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களிடமிருந்து உரிய விளக்கங்கள் பெற்று துறை வாரியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை இம்முறைமன்ற நடுவம் கேட்டுக் கொள்கிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.** 23/6/17

**பெறுநர்**

1) நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை-600 005.
2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர் மண்டலம்.
3) நகராட்சி ஆணையர்,
கள்ளக்குறிச்சி நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.
4) திரு. A. முருகன்,
யாதவ முன்னேற்ற சங்கம்,
உலகப்பசெட்டி கொல்லை தெரு,
கள்ளக்குறிச்சி, விழுப்புரம்மாவட்டம் - 606 202.

23.6.17
23/6/17